பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

15 08 2024 7 15
வியாழக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள் -

1. நாட்டின் 78-வது சுதந்திரதினம் நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.
2. தில்லி செங்கோடையில் பிரதமர் திரு நரேந்திரமோடி தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியதை செலுத்தினார்.
3. 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நிச்சயம் எட்ட முடியும் என்று பிரதமர் கூறியுள்ளார்.
4. மாநிலங்களின் தலைநகரங்களில் அந்தந்த மாநில முதலமைச்சர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினர்.
5. 20 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து போட்டியில் பங்கேற்கும் இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

நாட்டின் 78-வது சுதந்திரதினம் நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

வரலாற்று சிறப்பு மிக்க தில்லி செங்கோட்டையில் பிரதமர் திரு நரேந்திரமோடி தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

*( சவுண்ட்பைட் - மியூசிக் ) -58-- செகண்ட்*

ஹெலிகாப்டர்கள் மூலம் தேசியக் கொடிக்கு மலர்கள் தூவப்பட்டது.

இதையடுத்து உரையாற்றிய பிரதமர், நாட்டு மக்களுக்கு சுதந்திர தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

இந்நாளில் நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட தியாகிகளை நினைவுகூர்வதாக அவர் கூறினார்.

2047-க்குள் வளர்ச்சியடைந்த பாரம் என்ற இலக்கை நிச்சயம் அடைய முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

வளர்சசி அடைந்த பாரதம் என்பது வெறும் வெற்று முழக்கம் அல்ல 140 கோடி மக்களின் கனவு என்று குறிப்பிட்ட பிரதமர், வளர்ச்சியடைந்த பாரத்திற்காக நாட்டு மக்கள் தங்களை அர்ப்பணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

கோடிக்கணக்கான மக்கள் நாட்டின் வளர்சசிக்கான ஆலோசனைகளை தம்முடன் பகிர்ந்து கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

2047-ல் உலகின் உற்பத்தி மையமாக இந்திய உருவெடுக்கும் என்று அவர் தெரிவித்தார்.

சிறுதானியங்களை உலகில் உள்ள அனைவருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று அவர் கூறினார்.

திறன்பெற்ற இளைஞர்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

தில்லி செங்கோட்டைமுதல் இரண்டு கோடியே 50 லட்சம் குடும்பங்களுக்கு புதிதாக மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜல்ஜீவன் திட்டத்தின் மூலம் 12 கோடி குடும்பங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் நலத்திட்டங்கள் மூலம் அனைத்து தரப்பினரும் பயனடைந்துள்ளதாக என்றும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் காரணமாக மாணவர்கள், இளைஞர்கள், விவசாயிகளுக்கு எளிதில் வங்கிக்கடன் கிடைப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மாற்றங்கள் அரசியலுக்கானவை அல்ல என்றும் அவை, நாட்டின் முன்னேற்றத்திற்கானவை என்று கூறிய பிரதமர், நாட்டை வலிமையாக்குவதற்காகவே மாற்றங்களும், சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்டுவதாகத் தெரிவித்தார்.

அரசின் திட்டங்களினால் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த ஒரு கோடி மகளிர் லட்சாதிபதியாக மாறியுள்ளதாக பிரதமர் கூறினார்.

சுய உதவிக் குழுக்கள் மூலம் பெண்களுக்கு ஒன்பது லட்சம் கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

விண்வெளித்துறையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் காரணமாக அதிக அளவிலான செயற்கைக் கோள்கள் விண்ணில் செலுத்தப்படுவதுடன், இத்துறையில் முன்னேற்றத்தை அடைந்து வருவதாக திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

மீனவர்கள் நலனுக்காக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களையும் அவர் எடுத்துரைத்தார்.

முன் எப்போதும் இல்லாத வகையில் வடகிழக்கு மாநிலங்கள் வளர்ச்சியின் புதிய உச்சங்களை தொட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

காலனி ஆதிக்க காலத்தில் இருந்த பழைய சட்டங்கள் நீக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாக புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதையும் திரு நரேந்திரமோடி சுட்டிக்காட்டினார்.

மக்களுக்கான அரசாக இருக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

உலக அளவில் இந்தியாவின் ஏற்றுமதி அதிகரித்து வருவதாகவும், உலக வளர்ச்சிக்கு இந்தியா பெரும் பங்காற்றுவதாகவும் அவர் தெரிவித்தார்.

புதிய தேசிய கல்விக் கொள்கையில் தாய்மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளில் மருத்துவ படிப்புக்கான இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகக் கூறிய அவர், இது மேலும் அதிகரிக்கப்படும் என்று உறுதியளித்தார்.

இயற்கை உணவுகளுக்கான தேவை உலகம் முழுவதும் அதிகரித்து வருவதாகவும், இந்த உணவு வகைகளின் முக்கிய மையமாக இந்தியா உருவெடுத்துள்ளது என்றும் அவர் கூறினார்.

ஆராய்ச்சி மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளுக்காக பட்ஜெட்டில் ஒரு லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தொலைத் தொடர்புத் துறையில் முன்பு, இரண்டு-ஜி அலைக்கற்றை தொடர்பான சேவைகளை வழங்குவற்கே சிரமங்கள் இருந்ததாகவும்., தற்போது ஐந்து-ஜி தொலைத்தொடர்பு சேவையில் இந்தியா வேகமாக முன்னேறி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இத்துடன் நின்றுவிடாமல் இந்த முன்னேற்றங்ள் மேலும் தொடரும் என்று பிரதமர் தெரிவித்தார்.

மூன்றாவது முறையாக நாட்டிற்கு பணியாற்றும் வாய்ப்பை வழங்கிய மக்களுக்கு தாம் அர்ப்பணிப்புடன் தொடர்ந்து சேவையாற்ற உறுதிபூண்டுள்ளதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

முன்னதாக தில்லி செங்கோட்டை வந்த பிரதமரை மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் வரவேற்றார்.

இதையடுத்து முப்படைகள் மற்றும் தில்லி காவல்துறையினரின் அணி வகுப்பு மரியாதையை பிரதமர் ஏற்றுக் கொண்டார்.

முன்னதாக திரு நரேந்திரமோடி தில்லி ராஜ்காட்டில் தேசப்பிதா மகாத்மா காந்தியின் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார்.

**[]<<<>>>[]**

மாநிலங்களின் தலைநகரங்களில் அந்தந்த மாநில முதலமைச்சர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டனர்.

உத்திரபிரதேசத்தில் திரு யோகி ஆதித்யநாத்தும், ஆந்திராவில் திரு சந்திரபாபு நாயுடுவும், பீகாரில் திரு நிதிஷ்குமாரும், தேசிய கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினர்.

தமிழகத்தில் முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் மூவர்ணக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய முதலமைச்சர், முதல்வர் மருந்தகம் என்ற புதிய திட்டம் தொடங்கப்படும் என்று அறிவித்தார். வரும் பொங்கல் பண்டிகையையொட்டி முதல்கட்டமாக மாநிலம் முழுவதும் ஆயிரம் மருந்தகங்கள் திறக்கப்படும் என்றும் அவா. கூறினார்.

2026-ஆம் ஆண்டுக்குள் 75 ஆயிரம் அரசு பணியிடங்கள் நிரப்பப்படும் என்பன உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளையும் அவர் வெளியிட்டர்.

எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் மாநில அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக திரு மு க ஸ்டாலின் தெரிவித்தார்.

முன்னதாக காவல் துறையினரின் அணி வகுப்பு மரியாதையையும் அவர் ஏற்றுக் கொண்டார்.

பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு மாநில அரசின் விருதுகளையும் திரு மு க ஸ்டாலின் இந்நிகழ்ச்சியில் வழங்கினார்.

அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள் உள்ளிட்டவற்றிலும் சுதந்திர தினவிழா கொண்டாட்டங்கள் கோலாகலமாக நடைபெற்று வருகின்றன.

இந்நாளையொட்டி நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் தலைவர் திரு **Young liu** தபிரதமர் திரு நரேந்திரமோடியை புதுதில்லியில் நேற்று சந்தித்து பேசினார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், இந்த சந்திப்பு ஆக்கப்பூர்வமாக அமைந்தது என்று கூறியுள்ளார்.

இந்தியாவின் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து அவரிடம் எடுத்துரைத்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகம், ஆந்திரா, கர்நாடகா, ஆகிய மாநிலங்களின் ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் முதலீட்டு திட்டங்கள் குறித்து அவருடன் ஆலோசனை நடத்தியதாகவும் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 17 தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் தாயகம் அனுப்பப்பட்டுள்ளதாக இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

உலக அளவில் இந்தியாவின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளதாக தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி கூறியுள்ளார்.

சென்னை ஐ ஐ டி ஆராய்ச்சி மையத்தில் நேற்று நடைபெற்ற பிரிவினை துயரங்கள் நினைவு தின நிகழ்ச்சியில் பேசிய அவர், உலகளாவிய விவகாரங்களில் இந்தியாவின் ஆலோசனைகள் தற்போது முக்கியத்துவம் பெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த சூழலில் எதிர்மறை பிரச்சாரங்களை மேற்கொள்ளும் தேசவிரோத சக்திகளிடம் இளைஞர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென்று திரு ஆர் என் ரவி கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

அமலாக்கத்துறையின் புதிய இயக்குநராக திரு ராகுல் நவின் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது அவர் அமலாக்கத்துறையின் சிறப்பு இயக்குநராக பணியாற்றி வருகிறார்.

புதிய இயக்குநராக திரு ராகுல் நவீனை நியமிக்க, நியமனங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

**[]<<<>>>[]**

மத்திய உள்துறை செயலராக மூத்த ஐ ஏ எஸ் அதிகாரி திரு கோவிந்த் மோகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது உள்துறை செயலாளராக பணியாற்றி வரும் திரு அஜய்குமார் பல்லாவின் பதவிக்காலம் வரும் 22-ஆம் தேதியுடன் நிறைவடைவதையடுத்து, திரு கோவிந்த் மோகன் அப்பொறுப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளர்.

தற்போது திரு கோவிந்த்மோகன் கலாச்சார அமைச்சகத்தின் செயலாளராக பொறுப்பு வகித்து வருகிறார்.

**[]<<<>>>[]**

ஐ நா-வுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதியாக திரு **Parvathaneni Harish** நியமிக்கப்பட்டுள்ளார்.

வெளியுறவுத்துறை பணி அதிகாரியான அவர் தற்போது ஜெர்மனிக்கான இந்திய தூதராக பணியாற்றி வருகிறார்.

ஐ நா-வுக்கான நிரந்தர பிரதிநிதியாக பணியாற்றி வந்த திருமதி ருச்சிரா கம்போஜ் கடந்த ஜூன் மாதம் ஓய்வுபெற்றதை அடுத்து, திரு **Parvathaneni Harish** அப்பொறுப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

குரங்கு அம்மை நோய் பரவி வருவது சர்வதேச அளவிலாக சுகாதார அவசர நிலை என உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.

காங்கோ உள்ளிட்ட ஆப்ரிக்க நாடுகளில் இந்த நோய் தொற்று பரவல் அதிகரித்துள்ளதை அடுத்து, அந்த அமைப்பின் தலைமை இயக்குநர் திரு டெட்ரோஸ் அதானம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இரண்டாவது முறையாக இந்த அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கோவில் முதலில் பரவிய இந்நோய் புருண்டி, கென்யா, உகாண்டா நாடுகளுக்கும் பரவி உள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

20 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து போட்டியில் பங்கேற்கும் இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

23 பேர் கொண்ட இந்த பட்டியலை இந்திய கால்பந்து பயிற்சியாளர் ரஞ்ஜன் சவுத்திரி வெளியிட்டுள்ளார்.

இப்போட்டி நேபாள தலைநகர் காட்மண்டுவில் நாளை தொடங்கி வரும் 26-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

இப்போட்டியில் இந்தியா, இலங்கை, மாலத்தீவு, பூட்டான், நேபாளம், பங்ளாதேஷ் அணிகள் பங்கேற்கின்றன.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் தகுதி நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து இந்திய மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் தாக்கல் செய்த மனுவை விளையாட்டுகளுக்கான சர்வதேச நடுவர்மன்றம் நிராகரித்துள்ளது.

சர்வதேச நடுவர்மன்றத்தின் தீர்ப்பு ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது என்று இந்திய ஒலிம்பிக் சங்க தலைவர் பி டி உஷா கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

பாரிஸில் இம்மாதம் 28-ஆம் தேதி தொடங்க உள்ள பாராலிம்பிக்ஸ் போட்டியில் இந்தியா புதிதாக மூன்று போட்டிகளில் பங்கேற்கவுள்ளது.

சைக்ளிங், துடுப்புப் படகுப் போட்டி மற்றும் பார்வையற்றோருக்கான ஜூடோ போட்டிகளில் இந்தியா முதல் முறையாக பங்கேற்கவுள்ளது.

இதையடுத்து பாராலிம்பிக்கில் மொத்தம் 12 பிரிவுகளில் இந்திய வீராங்கள் பங்கேற்கவுள்ளனர்.

**[]<<<>>>[]**

சீனாவில் நடைபெறும் 18 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மகளிர் **Hand Ball** சாம்பியன் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் இந்தியா – பிரேசிலை எதிர்கொள்கிறது.